# தேவாரப்பாடல் பாடப்பெற்ற நடுநாட்டுத்தலங்கள் அவற்றின் தல விருட்சங்கள்

**தி.நிமலன்,**

*கௌரவ விரிவுரையாளர், இயற்பியல் துறை,*
*அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*திருவெண்ணைநல்லூர்-607203.*

**முக்கிய வார்த்தைகள்:**

தேவாரப்பாடல்கள், நடுநாட்டுத்தலங்கள் , தல விருட்சங்கள் , கொன்றை மரம், வன்னி மரம் , ஆலமரம் , செண்பக மரம் , கல்லால மரம் , வெள்ளை எருக்கஞ்செடி, நாவல்மரம், புன்னை மரம் , வில்வமரம், மருத மரம், மூங்கில்மரம், பாதிரிமரம், பனை மரம், மகிழமரம்.

*முன்னுரை:*

சைவ சமய கடவுளான சிவப்பெருமானின் மீது பாடப்பெற்ற பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் எனப்படும். தேவாரங்கள் பதிக வடிவில் பாடப்பட்டுள்ளன. பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்ட தாகும். தேவாரப்பாடல் பாடப்பெற்ற திருத்தலங்கள் என்பவை சைவசமய குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் அப்பர் ஆகிய இருவரும் ஏழாம் நூற்றாண்டிலும் சுந்தரர் எட்டாம் நூற்றாண்டிலும் தாம் இயற்றிய தேவாரப்பாடல்களில் பாடிய 276 சிவத்தலங்கள் ஆகும். இத்தலங்களில் உள்ள சிவனைப் பற்றி பத்து பாடல்கள் கொண்ட பதிகங்களாக ஒருவரோ , இருவரோ , மூவரோ பாடல்களை பாடியுள்ளனர். தேவாரப்பாடல் பாடப்பெற்ற தலங்களில் தொண்டை நாடு (32) , நடு நாடு (22), சோழ நாட்டு காவிரியாற்றின் வட கரை (63) , சோழ நாட்டு காவிரியாற்றின் தென் கரை(128), பாண்டிய நாடு (14),கொங்கு நாடு (7), மலை நாடு (1), துளுவ நாடு (1), வட நாடு (5), ஈழ நாடு (2) , புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட காவிரி தென்கரைத் தலமான திருவிடைவாய் மற்றும் திருக்கிளியன்னவூர் ஆகிய இடங்களி ல் உள்ள 276 சிவன் கோயில்கள் அடங்கும்.

நமது முன்னோர்கள் ஒவ்வொரு கோ யிலுக்குகென்றும் ஒரு தல விருட்சத்தை வைத்து வழிபட் டு வந்தனர். அது அரசமரம், வேம்பு, வன்னி, பனை, கொன்றை , புன்னைமரம், நாவல்மரம், வில்வம் போன்றவைகளாக இருந்தது. தல விருட்சம் என்பது கோயிலிலுள்ள மரத்தை குறிக்கும். மரங்களிலும் கடவுள் தன்மை உண்டு என்று சொல்வதற்காகவும், அந்த மரத்தின் பயன் நலன்களை தலைமுறை தாண்டி கொண்டு செல்லவும் தலவிருட்சங்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு மரத்திற்கும் உள்ள தனிப்பட்ட சிறப்பான மருத்துவ குணநலன்களை மக்களுக்கு உணர்த்தவே இவ்வாறு கோயில்களில் தல விருட்சங்கள் அமைக்கப்பட்டன. இவ்வாறு தேவாரப்பாடல்

பாடப்பெற்ற நடுநாட்டுத்தலங்களில் அமைந்துள்ள தல விருட்சங்கள் பற்றி இங்கு ஆராய்வோம்.

**கொன்றை மரம்**

தீர்த்தனகிரி, திருச்சோபுரம் , திருவதிகை , திருக்கோவிலூர் , திருத்தளூர் , திருமாணிக்குழி ஆகிய திருக்கோயில்களில் தலமரமாக விளங்குவது கொன்றை மரமாகும்.

**தேவாரப்பாடல்**

உள்ளத்தீரே போதுமின்
  னுறுதியாவ தறிதிரேல்
அள்ளற்சேற்றிற் காலிட்டிங்
  கவலத்துள் அழுந்தாதே
கொள்ளப்பாடு கீதத்தான்
  குழகன்கோவ லூர்தனுள்
வெள்ளந்தாங்கு சடையினான்
  வீரட்டானஞ் சேர்துமே.
- திருஞானசம்பந்தர்

நீள் சதுரமான கூட்டிலைகளையும் மஞ்சள் நிறப் பூங்கொத்துகளையும் நீண்ட உருளை வடிவக் காய்களையும் உடைய மரமாகிய இது இயற்கையாக வளர்கிறது. இம்மரத்தின் பட்டை, பூ, வேர், காய் ஆகியவை எல்லாம் மருத்துவப் பயனுடையதாக விளங்குகிறது.

**இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:**

நோய்களை நீக்கி உடலை தேற்றும் ; காய்ச்சல் தணிக்கும் ; மல மிளக்கும் ; வாந்தியுண்டாக்கும்; உடல் தாதுக்களை அழுகாமல் தடுக்கும்; வயிற்று வாயு அகற்றும்; நுண்புழுக்களைக் கொல்லும் ஆகிய மருத்துவப் பண்புகளை கொண்டது.

**வன்னி மரம்**

திருமுதுகுன்றம், திருவண்டார்கோயில் , கிராமம் , திருவாமத்தூர் ஆகிய திருக்கோயில்களில் தலமரமாக விளங்குவது வன்னி மரமாகும்.

**தேவாரப்பாடல்**

காண்டனன் காண்டனன் காரிகை
யாள்தன் கருத்தனாய்
ஆண்டனன் ஆண்டனன் ஆமாத்
தூர்எம் மடிகட்காட்

பூண்டனன் பூண்டனன் பொய்யன்று
சொல்லுவன் கேண்மின்கள்
மீண்டனன் மீண்டனன் வேதவித்
தல்லா தவர்கட்கே.
- சுந்தரர்.
-

இது ஓர் முள்ளுள்ள இலையுதிர் மர மாகும். மிகச் சிறிய கூட்டிலைகளை யும் சதைப்பற்றுடைய உருளைவடிவக் காய்களை யும் உடையது. மரம் முழு வதும் மருத்துவக் குணமுடையதாக விளங்குகிறது.

இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:

குழந்தை பாக்கியம் உண்டாக்கும் ; காய்ச்சல் போக்குதல் ; சளியை அ கற்றுதல்; இரத்தத்தை சுத்தபடுத்தும் ஆகிய மருத்துவப் பண்புகளை கொண்டது.

ஆலமரம்

திருவட்டத்துறை திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது ஆலமரம் மரமாகும்.

தேவாரப்பாடல்

பொன் ஒப்பானைப், பொன்னிற் சுடர் போல்வதோர்
மின் ஒப்பானை, விண்ணோரும் அறிகிலார்
அன்னை ஒப்பானை, அரத்துறை மேவிய
தன் ஒப்பானைக் கண்டீர் நாம் தொழுவதே.
- திருநாவுக்கரசர்

இம்மரம் அகன்ற இலைகளையுடையது , கிளைகளிலிருந்து விழுதுகள் வளர்ந்து தரையில் ஊன்றி மரத்தைத் தாங்கி அகன்றதாக்கும் தன்மை கொண்டது. இம்மரத்தின் இலை, மொட்டு, பழம், விதை, பால், பட்டை, விழுது ஆகியன மருத்துவப் பயனுடையதாகும்.

இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்; சருமத்தை பாதுகாக்கும்; நீரிழவு நோயை குணபடுத்தும்; நரம்பியல் சார்ந்த பிரச்சனையை சரிசெய்தல் ஆகிய மருத்துவக் குணமுடையது.

செண்பக மரம்

பெண்ணாடம் திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது செண்பக மரமாகும்.

தேவாரப்பாடல்

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென்
மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க்கொழுந்தே.
- திருநாவுக்கரசர்

செண்பக மரம் மணமுள்ள மஞ்சள் நிறமுள்ள மலர்களையும் , இலைகள் நீண்டு வளர்ந்து, மேற்புறம் பசுமையாகவும் , பின்புறம் உரோமங்கள் மண்டிக் கிடப்பதாலும் , காற்றில் உள்ள தூசுகளை அகற்றும் தன்மையை கொண்டுள்ளது. இம்மரத்தின் இலை , பூ, விதை, வேர், பட்டை ஆகியவை மருத்துவப் பயனுடையதாகும்.

இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:

உடல் சூட்டை தனிக்கிறது ; வீக்கங்களை குறைத்தல் ; பசியை தூண்டுதல் ; வயிற்றுவலி மற்றும் பாத வெடிப்புகளை போக்குதல் ; காய்ச்சலை குணபடுத்துதல் ஆகிய மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளது.

கல்லால மரம்

திருக்கூடலையாற்றூர் திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது கல்லால மரமாகும்.

தேவாரப்பாடல்

ஊர்தொறும் வெண்டலைகொண்
டுண்பலி இடுமென்று
வார்தரு மென்முலையாள்
மங்கையொ டும்முடனே
கூர்நுனை மழுவேந்திக்
கூடலை யாற்றூரில்
ஆர்வன்இவ் வழிபோந்த
அதிசயம் அறியேனே.
- சுந்தரர்.

இது விழுதுகள் இல்லாத ஆலமர வகையாகும். பாறைகளின் அடியில் வளர ஆரம்பித்து அதில் பிணைந்து பல கிளைகளுடன் உயரமாக வளரும் பால் கசியும் மரமாகும். இலைகள் அகன்று நீண்டு நுனி கூர்மையாக உள்ளது. இம்மரத்தின் காய் , பழம், இலை, பால் போன்றவை மருத்துவ பயனை அளிக்கும்.

இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:

இதயத்தை வலுபடுத்தும் ; மனக்குழப்பம் நீக்கும் ; உடலுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தும்; சிறுநீர் பெருக்குதல் மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளது.

வெள்ளை எருக்கஞ்செடி

இராஜேந்திரபட்டினம் திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது வெள்ளை எருக்கஞ்செடியாகும்.

தேவாரப்பாடல்

மறையான் நெடுமால் காண் பரியான்
மழுவேந்தி நிறைய மதிசூடி நிகழ்முத்
தின்றொத்தே இறையான் எருக்கத்தம்
புலியூர் இடங்கொண்ட கறையார்
மிடற்றானைக் கருதக்கெடும் வினையே.
-திருஞானசம்பந்தர்.

எருக்கு, அகன்ற இலைகளையுடைய நேராக வளரும் பாலுள்ள குறுஞ்செடியாகும். வெள்ளை மலர்களையுடைய வெள்ளெருக்கு செடியே மருத்துவத்திற்குச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இலை , பூ, பால், பட்டை, வேர் முதலியன மருத்துவப் பயனுடையதாகும்.

இச்செடியின் மருத்துவக் குணங்கள்:

நஞ்சு நீக்குதல்; காய்ச்சலை குணபடுத்துதல்; உடலிலுள்ள கட்டிகளைக் கரைத்து வலியினை குறைத்தல் ; மார்புசளி நீக்குதல் ; கோழை நீக்குதல் ; பசியினை உண்டாக்குதல் ஆகிய பண்புகளையுடையது.

நாவல்மரம்

திருநாவலூர் திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது நாவல் மரமாகும்.

தேவாரப்பாடல்

அஞ்சுங்கொண் டாடுவர் ஆவினிற்
சேவினை ஆட்சிகொண்டார்
தஞ்சங்கொண் டார்அடிச் சண்டியைத்
தாமென வைத்துகந்தார்
நெஞ்சங்கொண் டார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தெனை ஆளுங்கொண்டு
நஞ்சங்கொண் டார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே.
- சுந்தரர்.

நாவல் மரம் ஒரு பசுமை மாறாத, வெப்பமண்டலப் பகுதிக்குரிய ஒரு பெருமரமாகும். உண்ணக் கூடிய கருஞ்சிவப்பு நிறக் கனிகளை உடையது. இதில் வெண்நாவல், கருநாவல், நரிநாவல் எனப் பல வகைகள் உள்ளன. இம்மரத்தின் இலை , வேர், விதை, பழம், பட்டை ஆகியவை மருத்துவப் பயனுடையதாகும்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:

நீரிழவு நோயை குணபடுத்துதல் ; சிறுநீர் எரிச்சலை குறைத்தல் ; உடல் சூட்டை தணித்தல்; கண் நோய்களை குணபடுத்துதல் ; வயிற்று போக்கினை சரிசெய்தல் போன்ற பயன்களை தருகிறது.

புன்னை மரம்

நெய்வணை திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது புன்னை மரமாகும்.

தேவாரப்பாடல்

நல் வெணெய் விழுது பெய்து ஆடுதிர், நாள்தொறும்,
நெல்வெணெய் மேவிய நீரே;
நெல்வெணெய் மேவிய நீர்! உமை நாள்தொறும்
சொல் வணம் இடுவது சொல்லே.
- திருஞானசம்பந்தர்

இது சற்று நீண்ட தான பளப்பளப்பான இலைகளையும் , உருண்டையான உள்ஓடுள்ள சதைக்கனிகளையும் உடைய மரமாகும். இதன் இலை , பூ, விதை, பட்டை, எண்ணெய் ஆகியவை மருத்துவப் பயன் உடையது.

இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:

தோல் நோய்களை குணபடுத்துதல்; கண் பாதிப்புகளை சரி செய்தல் ; தலைவலி போக்குதல்; காய்ச்சலை குணபடுத்துதல் ; சிரங்கு மற்றும் காயங்களை போக்குதல் போன்ற மருத்துவ பயன் கொண்டது.

வில்வமரம்

அரகண்டநல்லூர் திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது வில்வ மரமாகும்.

தேவாரப்பாடல்

என்பினார்கனல் சூலத்தார் இலங்குமாமதி
உச்சியான் பின்பினாற் பிறங்கும்
சடைப்பிஞ்ஞகன் பிறப்பிலி யென்று
முன்பினார் மூவர்தாம் தொழு முக்கண்
மூர்த்திதன் தாள்களுக்கு அன்பினார்
அறையணி நல்லூர் அங்கையால் தொழுவார்களே.
- திருஞானசம்பந்தர்.

இது ஒரு கற்ப மூலிகையாகும் . அதாவது, இன்ன நோய்க்கு மட்டுமே மருந்துதென்று அமையாது எல்லா நோய்களையும் நீக்கும் தன்மையுடையது. இது கூவிளம் , கூவிளை என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. வில்வமரத்தில் பல வகைகள் உள்ளன. இதில் மகா வில்வம் , கொடி வில்வம் , கற்பூர வில்வம் , சித்த வில்வம் , என பல

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

© 2022, IRJTSR

வகைகள் உள்ளன குறிப்பாக , மூன்று இலை வில்வ இலைகளையே பூஜைக்குப் பயன்படுத்துகிறோம். ஐந்து மற்றும் ஏழு இலைகள் உள்ள வில்வ மரங்களும் உள்ளன.வில்வமரத்தில் இலை , பூ, பிஞ்சு, பழம், வேர்ப்பட்டை, பிசின் ஆகியவை மருத்துவப் பயன் உடையதாக விளங்குகிறது.

இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:

கண் பார்வையை சிறப்பாக்கும் ; சளி , இரும்பல் போக்கும் ; பல் நோய்களை அகற்றும்; காமாலையைப் போக்கும் ; மூச்சு பிரச்சனைகளுக்குத் தீர்வாகிறது ; வயிற்றுவலி போக்குதல் போன்ற குணங்களை கொண்டுள்ளது.

மருத மரம்

டி.இடையாறு திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது மருத மரமாகும்.

தேவாரப்பாடல்

முந்தையூர் முதுகுன்றங் குரங்கணின் முட்டம்
சிந்தையூர் நன்றுசென் றடைவான் திருவாரூர்
பந்தையூர் பழையாறு பழனம் பைஞ்ஞீலி
எந்தையூர் எய்தமான் இடையா றிடைமருதே.
- சுந்தரர்.

இம்மரம் குறுகலான நீள்சதுர இலைகளையும் சாம்பல்நிற பட்டையையும் கொண்டு உயர்ந்து வளரும் பெரிய இலையுதிர் மரமாகும். பட்டை சதைப்பற்றாக இருக்கும். இதன் இலை, பழம், விதை, பட்டை முதலியன மருத்துவக் குணங்கொண்டவை.

இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:

இதய பலவீனம் தீர்க்கும் ; புண்களை குணமாக்கும் ; உடலுக்கு குளிர்ச்சியை அளிக்கும்; சிறுநீரக கல்லை கரைக்கும் ; பித்த வெடிப்புகளை போக்கும் ; நீரிழவு , கல்லீரல் பிரச்சனைகளை தீர்க்கும் போன்ற பல மருத்துவ குணங்களை கொண்டுள்ளது.

மூங்கில்மரம்

திருவெண்ணைநல்லூர் திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது மூங்கில் மரமாகும்.

தேவாரப்பாடல்

பித்தாபிறை சூடிபெரு
மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள்

அத்தாஉனக் காளாயினி
  அல்லேன்எனல் ஆமே.
            - சுந்தரர்.

இது பெரிய கூரான முனையுடைய சுரசுரப்பான மெல்லிய இலைகளைக் கொண்ட , கணுக்களில் முள்ளுள்ள , உட்கூடான, வேகமாக வளரும் பெரிய மரமாகும். இதன் இலை, கணு, வேர், விதை, உப்பு ஆகியவை மருத்துவப் பயனுடையது.

இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:

இரத்த கசிவை குறைக்கும் ; தலை மற்றும் இடுப்பு வலி போக்குதல் ; மாதவிடாய்த் தூண்டியாகவும் , நுண்புழுக் கொல்லியாகவும் செயல்படும் ; விஷத்தை முறிக்கும்; பல் ஈறுகளை பலப்படுத்தும் ; அரிப்பை குறைக்கும் போன்ற பல மருத்துவக் குணங்களுடையது.

பாதிரிமரம்

திருபாதிரிபுலியூர் திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது பாதிரி மரமாகும்.

தேவாரப்பாடல்

முன்னம்நின்ற முடக்கால்
  முயற்கருள் செய்துநீள்
புன்னைநின்று கமழ்பா
  திரிப்புலி யூருளான்
தன்னைநின்று வணங்குந்
  தனைத்தவ மில்லிகள்
பின்னைநின்ற பிணியாக்
  கையைப்பெறு வார்களே.
            - திருஞானசம்பந்தர்.

இது இணையில்லாத எதிர் அடுக்கில் அமைந்த சிறகமைப்புக் கூட்டிலைகளையுடைய வறட்சியான காடுகளில் வளரும் மரமாகும். இதன் இலை , பூ, வேர், விதை ஆகியவை மருத்துவப் பயன் கொண்டது.

இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:

இரத்த சோகையைக் கட்டுப்படுத்தும் ; இதயத்தை வலுபடுத்தும் ; சிறுநீர் பெருக்குதல்; ஒற்றை தலைவலி போக்கும் ; ஆண்மை குறைவு நீக்கும் ; குடல்புண் , மலச்சிக்கல் குணபடுத்துதல் போன்ற பல மருத்துவக் குணங்களையுடையது.

பனை மரம்

பனையபுரம் திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது பனை மரமாகும்.

தேவாரப்பாடல்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2022, IRJTSR 

விண்ண மர்ந்தன மும்ம தில்களை வீழ வெங்கணை யாலெய் தாய்விரி
பண்ணமர்ந் தொலிசேர் புறவார் பனங்காட்டூர்ப்
பெண்ண மர்ந்தொரு பாக மாகிய பிஞ்ஞ காபிறை சேர்நு தலிடைக்
கண்ணமர்ந் தவனே கலந்தார்க் கருளாயே.
- திருஞானசம்பந்தர்.

இது நீட்டமாக விசிறி போன்ற தனியிலைகளையும் பெரிய்தாக வட்டமாக பழுப்பு நிற பழங்களையும் சிறிய பூக்களுடன் வளரும் புல்லின மரமாகும். இதன் குருத்து , ஓலை, பாளை, பூ, கள், நுங்கு, பழம் ஆகியவை மருத்துவப் பயனுடையதாகும்.

இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:

உடலுக்கு குளிர்ச்சியை அளிக்கிறது ; கண் மற்றும் வயிற்றுப்புண்ணை ஆற்றும் ; இரத்தச் சோகையை குணபடுத்தும் ; மார்புச்சளி இளகும் ; இதயத்தை வலுப்படுத்தும் ; தோல் வியாதிகளை சரி செய்கிறது போன்ற பல மருத்துவக் குணங்களையுடையது.

மகிழமரம்

திருவண்ணாமலை திருக்கோயிலில் தலமரமாக விளங்குவது மகிழ மரமாகும்.

தேவாரப்பாடல்

உண்ணாமுலை உமையாளொடும் உடன்ஆகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ஆர்ந்தன அருவித்திரள் மழலைம்முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.
- திருஞானசம்பந்தர்.

இம்மரம் அடர்த்தியான இலைகளையும் இனிய மணமுடைய சக்கர வடிவிலான வெண்மலர்களையும் உடையது. இதன் இலை , பூ, காய், விதை, பட்டை ஆகியன மருத்துவக் குணமுடையது.

இம்மரத்தின் மருத்துவக் குணங்கள்:

நாள்பட்ட தலைவலியை நீக்குகிறது ; புண்களை குணப்படுத்தும் ; இதய நோய்களுக்கு மருந்தாகிறது ; காய்ச்சல் மற்றும் பல் வலிகளை போக்கும் ; உடலுக்கு வலிமையை அளிக்கிறது ; வயிற்றுப்போக்கினை கட்டுபடுத்துகிறது ; ஆண்மை தன்மையை அதிகரிக்கும் ; உடல் நச்சுக்களைப் போக்கும் போன்ற பல மருத்துவக் குணங்களை கொண்டுள்ளது.

தேவாரப்பாடல் பாடப்பெற்ற கோவில்கள் , அவற்றின் தல விருட்சங்கள் மற்றும் பாடல் பாடியவர்கள்:

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

| வரிசை எண் | மாவட்டம் | கோயில் பெயர் மற்றும் ஊர் | தல விருட்சம் | தேவாரப்பதிகம் பாடியவர்கள் |
|---|---|---|---|---|
| 1 | கடலூர் | அருள்மிகு தீர்த்தபுரீஸ்வரர் திருக்கோயில், திருவட்டத்துறை. | ஆலமரம் | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். |
| 2 | கடலூர் | அருள்மிகு பிரளயகாலேஸ்வரர் திருக்கோயில், பெண்ணாடம். | செண்பக மரம் | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர். |
| 3 | கடலூர் | அருள்மிகு வல்லபேஸ்வரர் திருக்கோயில், திருக்கூடலையாற்றூர். | கல்லால மரம் | சுந்தரர் |
| 4 | கடலூர் | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில், இராஜேந்திரபட்டினம். | வெள்ளெருக்கு | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். |
| 5 | கடலூர் | அருள்மிகு சிவக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயில், தீர்த்தனகிரி. | கொன்றை | சுந்தரர் |
| 6 | கடலூர் | அருள்மிகு மங்களபுரீஸ்வரர் திருக்கோயில், திருச்சோபுரம். | கொன்றை | திருஞானசம்பந்தர் |
| 7 | கடலூர் | அருள்மிகு வீரட்டானேஸ்வரர் திருக்கோயில், திருவதிகை. | கொன்றை | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். |
| 8 | விழுப்புரம் | அருள்மிகு பக்தஜனேஸ்வரர் திருக்கோயில், திருநாவலூர். | நாவல்மரம் | சுந்தரர் |
| 9 | கடலூர் | அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில், திருமுதுகுன்றம். | வன்னிமரம் | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். |
| 10 | விழுப்புரம் | அருள்மிகு சொர்ணகடேஸ்வரர் திருக்கோயில், நெய்வணை. | புன்னை | திருஞானசம்பந்தர் |
| 11 | விழுப்புரம் | அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில், திருக்கோவிலூர். | கொன்றை | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். |
| 12 | விழுப்புரம் | அருள்மிகு அதுல்யநாதேஸ்வரர் திருக்கோயில், அரகண்டநல்லூர். | வில்வம் | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர். |
| 13 | விழுப்புரம் | அருள்மிகு மருந்தீசர் திருக்கோயில், டி.இடையாறு. | மருதமரம் | சுந்தரர், திருநாவுக்கரசர். |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | விழுப்புரம் | அருள்மிகு கிருபாபுரீஸ்வரர் திருக்கோயில், திருவெண்ணைநல்லூர். | மூங்கில்மரம் | சுந்தரர் |
| 15 | கடலூர் | அருள்மிகு சிஷ்டகுருநாதேஸ்வரர் திருக்கோயில், திருத்தளூர். | கொன்றை | சுந்தரர் |
| 16 | புதுச்சேரி | அருள்மிகு பஞ்சனதீஸ்வரர் திருக்கோயில், திருவண்டார்கோயில். | வன்னிமரம் | திருஞானசம்பந்தர் |
| 17 | கடலூர் | அருள்மிகு வாமனபுரீஸ்வரர் திருக்கோயில், திருமாணிக்குழி. | கொன்றை | திருஞானசம்பந்தர் |
| 18 | கடலூர் | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருபாதிரிபுலியூர். | பாதிரிமரம் | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். |
| 19 | விழுப்புரம் | அருள்மிகு சிவலோகநாதர் திருக்கோயில், கிராமம். | வன்னிமரம் | திருநாவுக்கரசர் |
| 20 | விழுப்புரம் | அருள்மிகு பனங்காட்டீஸ்வரர் திருக்கோயில், பனையபுரம். | பனை | திருஞானசம்பந்தர் |
| 21 | விழுப்புரம் | அருள்மிகு அபிராமேஸ்வரர் திருக்கோயில், திருவாமத்தூர். | வன்னி மரம் | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். |
| 22 | திருவண்ணாமலை | அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில், திருவண்ணாமலை. | மகிழமரம் | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் |

தல விருட்சங்களின் தொகுப்பு:

| வரிசை எண் | தல விருட்சம் | காணப்படும் கோயில்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கொன்றை மரம் | 6 |
| 2 | வன்னி மரம் | 4 |
| 3 | ஆலமரம் | 1 |
| 4 | செண்பக மரம் | 1 |
| 5 | கல்லால மரம் | 1 |
| 6 | வெள்ளெருக்கு செடி | 1 |
| 7 | நாவல்மரம் | 1 |
| 8 | புன்னை மரம் | 1 |

| | | |
|---|---|---|
| 9 | வில்வமரம் | 1 |
| 10 | மருதமரம் | 1 |
| 11 | மூங்கில்மரம் | 1 |
| 12 | பாதிரிமரம் | 1 |
| 13 | பனை மரம் | 1 |
| 14 | மகிழமரம் | 1 |
| மொத்தம் | | 22 |

*முடிவுரை:*

தேவாரப் பாடல்கள் பாடப்பெற்ற 22 நடுநாட்டுத்தலங்களையும் அவற்றில் உள்ள தல விருட்சங்கள் பற்றியும் விரிவாக பார்த்தோம். இந்த இருபத்திரெண்டு திருத்தலங்களிலும் மொத்தமாக பதினான்கு அதாவது கொன்றை , வன்னி , ஆலமரம் , செண்பகமரம், கல்லால மரம் , வெள்ளெருக்கு செடி , நாவல் , புன்னை , வில்வம் , மருதமரம், மூங்கில் , பாதிரிமரம் , பனை மரம் , மகிழ மரம் ஆகிய தல விருட்சங்கள் அமைந்துள்ளன. இதில் கொன்றை மரமும் , வன்னி மரமும் அதிக கோவில்களில் அமந்துள்ளதை அறிகிறோம். இதேபோன்று இந்த தல விருட்சங்கள் அமைந்துள்ள கோவில்கள் பற்றிய தேவாரப் பாடல்களையும் அதை பாடியவர்களையும் அறிந்தோம். ஒவ்வொரு தல விருட்சமும் மனிதர்களுக்கு மிகவும் பயன் தரக்கூடிய மருத்துவ குணங்களை கொண்டுள்ளன. இவற்றின் பயன்களை நாம் ஒவ்வொருவரும் அறிந்து அதன் பயன்களை முழுவதுமாக பெறக்கூடிய வகையில் இந்த தல விருட்சங்களை பேணி பாதுகாப்பதோடு மட்டும் நிறுத்தி விடாமல் அவற்றை வளர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு அதன் மூலம் ஆரோக்கியமாக வாழ்வோம்.

## துணைநூற்பட்டியல்:

[1] ஸ்ரீரங்கம் பிரசன்னா, (2020). சம்பந்தர் தேவாரம். சென்னை: அமராவதி பதிப்பகம்.

[2] நடராஜன், பி.ரா. (2019). திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம். சென்னை: உமா பதிப்பகம்.

[3] முனைவர் சுப்பிரமணியன், ச.வே. (2015). பன்னிரு திருமுறை. சென்னை: மணிவாசகர் நூலகம்.

[4] கணபதி பிள்ளை, (2002). தேவாரம் திருமுறை - திரட்டு. சென்னை: மணிமேகலை பிரசுரம்.

[5] இளையபெருமாள், இரா. (2019). பலன் தரும் பதிகங்கள். சென்னை: சகுந்தலை நிலையம்.

[6] சுவாமி சிவராம்ஜி, (2012). திருமுறை திருத்தலங்கள். சென்னை: ஸ்ரீசெண்பகா பதிப்பகம்.

[7] கயல்விழி, மு. பத்துப்பாட்டில் விருட்சங்கள் , தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்.), தொ2.வெ2., (2020), 58-71.

[8] முனைவர் பரணி , சு . கலித்தொகையில் சிவத்தொன்மம் , தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்.), தொ3.வெ2., (2021), 60-63.

[9] முனைவர் தனலெட்சுமி, க. நற்றிணை பாடல்களில் வரும் ஊரின் சிறப்புகள் , தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்.), தொ2.வெ4., (2020), 76-80.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*